# 60 நிமிட ஜெப வழிகாட்டி:
# கொரோனா வைரஸ் தொற்றுநோய்க்காக ஜெபம் செய்தல்

## ஆயத்த பொருட்கள்:

ஒரு பைபிள், துதி பாடல்கள், தண்ணீர், சோப்பு, டிஸ்யூ பேப்பர், பேனா, பிளாஸ்டர்கள் / ரோலர் பேண்டேஜ், கை சுத்திகரிப்பு சானிட்டைசர்.

## அமைதி (5 நிமிட)

**ஜெபம்**
சங்கீதம் 46 ஐ சத்தமாக வாசிக்கவும்

**அமைதியாக இருங்கள்**
ஆழமாக சுவாசித்தபின், பரிசுத்த ஆவியானவரை வரவேற்கவும்

## ஆரவார (5 நிமிட)

**ஜெபம்**
சங்கீதம் 91 ஐ சத்தமாக வாசிக்கவும்

**துதி பாடல்**
தேவனின் மகத்துவத்தை குறித்ததான ஒரு துதிப் பாடலை பாடலாம்

## விண்ணப்ப ஜெபம்

(மொத்தம் 30 நிமிடங்கள் - ஒரு தலைப்புக்கு 5 நிமிடங்கள்)

**வைரஸை கட்டுப்படுத்துவதற்காக ஜெபியுங்கள்**
தண்ணீர் மற்றும் சோப்பைப் பயன்படுத்தி, உங்கள் கைகளை நன்கு கழுவுங்கள்.
கோவிட் 19 கொரோனா வைரஸ் பரவுவதை குறைக்கவும், நிறுத்தவும் தேவனிடம் கேளுங்கள்
அதிகமாக பாதிப்படைந்துள்ள நாடுகளில் தேவன் விசேஷத்த விதத்தில் கிரியை செய்ய ஜெபியுங்கள்.

## வியாதியுள்ளவர்களுக்காகவும் தனிமைப்படுத்தப் பட்டவர்களுக்காகவும் ஜெபியுங்கள்

உங்களுக்குத் தெரிந்த, வியாதியால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது தனிமைப்படுத்தப்பட்டவர்களின் பெயர்களை டிஷ்யூ பேப்பரில் எழுதிக் கொள்ளுங்கள்.
தனிமைப் படுத்தப் பட்டவர்கள் தேவனுடைய பிரசன்னத்தை உணரும்படியும், அவர்களை பாதுகாத்து பலப்படுத்தி குணப்படுத்தும்படியும் மன்றாடுங்கள்.

## நோய் எதிர்ப்பு சக்தி இல்லாமல் பலவீனமாய் இருப்பவர்களின் பாதுகாப்புக்காக ஜெபியுங்கள்

ஒரு பேனா மற்றும் பிளாஸ்டர்களை எடுத்துக் கொள்ளுங்கள்.
உங்களுக்குத் தெரிந்த வயதானவர்கள் அல்லது சரீர பலவீனமாக உள்ளவர்களின் (பலவீனத்தின் காரணமாக கொரோனா வைரஸ் பாதிப்புக்கு ஆளாக நேரிடும் என்ற நிலையில் இருப்பவர்கள்) பெயர்களை பிளாஸ்டரில் எழுதுங்கள்.
தொற்றுநோயிலிருந்து அவர்களைப் பாதுகாக்க தேவனிடம் கேளுங்கள்.

## உள்ளூர் மற்றும் தேசிய தலைவர்களுக்கான ஜெபம்

உங்கள் தலையில் கைகளை வைத்து, தேசிய மற்றும் உள்ளூர் அரசியல் தலைவர்கள், மக்களைப் பாதுகாப்பதற்கான முடிவுகளை எடுக்கும்போது, அவர்களுக்கு நல்ல ஞானம் கொடுக்கும்படி கடவுளிடம் கேளுங்கள்.
உங்கள் காதுக்கு மேல் கையை வைத்து, தலைவர்களுக்கு வழிகாட்ட சிறந்த ஆலோசகர்கள் அமைய தேவனிடம் கேளுங்கள்.
உங்கள் கைகளை உங்கள் முன்னால் விரித்து, தலைவர்கள் பொதுமக்களுக்கு தெளிவான ஆலோசனை சொல்லும் திறன் கிடைக்க தேவனிடம் கேளுங்கள்.

## மருத்துவ சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்காகன ஜெபம்

வைரஸால் பாதிக்கப்பட்டவர்களை கவனித்துக்கொள்ளும் சுகாதார நிபுணர்கள் (மருத்துவர்கள், செவிலியர்கள், ஆம்புலன்ஸ் குழுவினர் மற்றும் பலர்) பாதுகாக்கப்படும்படி கடவுளிடம் வேண்டுதல் செய்யுங்கள். நீங்கள் இப்படி ஜெபிக்கும்போது சானிடிசரை உங்கள் கைகளில் தேய்க்கவும்.
தேவன் அவர்களுக்கு சமாதானத்தையும், ஞானத்தையும் அருளவும், வேலையிடத்தில் அவர்கள் தொற்றுநோயிலிருந்து பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.

**தொற்றுநோயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மற்ற பகுதிகளுக்கான ஜெபம்**

கொரோனா தொற்றுநோயால் மறைமுகமாக பாதிக்கப்படுபவர்கள் பலர் உள்ளனர்.
அன்புக்குரியவர்களின் இழப்பை நினைத்து வருத்தப்படுபவர்களை ஆறுதல்படுத்தவும், வேலை செய்ய முடியாததால் பணக் கஷ்டத்தில் இருப்பவர்களுக்கும், பொருளாதார தேக்கத்தினால் அவதிஉறும் வணிகர்களுக்கும் ஏற்ற பொருளாதார உதவி கிடைக்க ஜெபியுங்கள்.

எண்ணாகமம் 6:24-26 ல் சொல்லப்பட்ட ஆசீர்வாதங்கள் மேற்சொல்லப்பட்ட ஒவ்வொரு காரியத்திற்கும் கிடைக்க ஜெபியுங்கள்.

## அர்ப்பணிப்பின் ஜெபம் (10 நிமிடங்கள்)

பீட் கிரேக் எழுதிய இந்த அர்ப்பணிப்பின் ஜெபத்தை ஜெபியுங்கள்:

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, கொரோனா வைரஸ் பரவலிலிருந்து எங்களைப் பாதுகாக்கும்படி வேண்டுகிறோம். தேவரீர் வல்லமையுள்ளவர்; நீரே இரக்கம் மிகுந்தவர்; இதுவே எங்கள் ஜெபம்

“எனக்கு இரங்கும், தேவனே, எனக்கு இரங்கும்; உம்மை என் ஆத்துமா அண்டிக்கொள்ளுகிறது; விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் உமது செட்டைகளின் நிழலிலே வந்து அடைவேன்” (சங்கீதம் 57: 1)

யேகோவா ஷாலோம், சமாதானத்தின் தேவனே, கொரோனா வைரஸின் தாக்கம் அதிகமாக உள்ள இடங்களில் வசிப்பவர்களையும், தற்போது தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் இருப்பவர்களையும் நினைக்கிறோம். அவர்கள் தங்கள் தனிமையில் உம்முடைய பிரசன்னத்தையும், பிரச்சனைகளின் மத்தியில் சமாதானத்தையும் உணரட்டும். நீரே சமாதான பிரபு, தேவரீர் வல்லமையுள்ளவர்; இரக்கம் மிகுந்தவர்; இது அவர்களின் ஜெபமாக இருக்கட்டும்.

"உம்முடைய இரக்கங்கள் சீக்கிரமாய் எங்களுக்கு நேரிடுவதாக; நாங்கள் மிகவும் தாழ்த்தப்பட்டுப்போனோம். எங்களை இரட்சிக்கும் தேவனே, நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவி செய்யும். (சங்கீதம் 79:8,9)

ஆறுதலின் தேவனே! ஆலோசனைக் கர்த்தாவே! தங்களது அன்புக்குரியவர்களின் திடீர் இழப்பினால் துக்கப்படுகிறவர்களுக்காக

ஜெபிக்கிறோம். அவர்கள் துன்பத்தின் நடுவே உமது ஐக்கியத்தையும், தங்கள் இழப்பில் உமது ஆறுதலயும், விரக்தியில் உமது நம்பிக்கையும் காணட்டும். எங்களுக்குத் தெரிந்தவர்கள் (பலவீனமானவர்கள், பாதிக்கப்படக்கூடியவர்கள், பயந்திருக்கிரவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள் மற்றும் முதியவர்கள்) பெயர்களை உம்மிடத்திலே இப்போது அறிக்கையிடுகிறோம்.

[இடைநிறுத்தம்] சகல ஆறுதலின் தெய்வமே, நீரே வல்லமையுள்ளவர்; நீரே இரக்கம் மிகுந்தவர்; இது எங்கள் ஜெபம்.

"அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்." (2 கொரிந்தியர் 1:10)

யேகோவா ராபா! சுகம் தரும் தேவனே! இந்த நெருக்கடியான காலத்தில் மருத்துவத்துறையில் வேலை செய்கிற எல்லாருக்காகவும் ஜெபிக்கிறோம். அவர்களுக்கு சோர்வு ஏற்படும் வேளைகளில் மன உறுதியையும், நல்ல ஞானத்தையும், வியாதியுள்ளவர்கள் மீது தொய்ந்து போகாத மனதுருக்கத்தையும் தாரும். இந்த வியாதிக்கான மருந்தைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் எல்லா மருத்துவ நிபுணர்களுக்காக வேண்டுகிறோம்; தேவரீர் அவர்களுக்கு தெளிந்த புத்தியையும், ஞானதையும் தாரும்; அவர்களது ஆராய்ச்சியில் இன்று சரியான பதிலை, ஒரு திருப்புமுனையை, ஒரு பலனைத் தாரும். இந்த இருளின் காலத்தில், இருளுக்கு மேலாக, தேவனே நீதியின் சூரியனாய் நீர் எழுந்தருளும். இதுவே எங்கள் ஜெபம் -

"ஆ, கர்த்தராகிய ஆண்டவரே, இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும், நீட்டப்பட்ட உம்முடைய புயத்தினாலும், வானத்தையும் பூமியையும் உண்டாக்கினீர்; உம்மாலே செய்யக்கூடாத அதிசயமான காரியம் ஒன்றுமில்லை" (எரேமியா 32:17)

சகல ஞானத்தின் தேவனே! எங்களுடைய தலைவர்களுக்காக ஜெபிக்கிறோம்; உலக சுகாதார அமைப்பில் உள்ள தலைவர்களுக்காக, தேசிய தலைவர்களுக்காக, உள்ளூர் தலைவர்களுக்காக, பள்ளிக்கூடம், மருத்துவமனை மற்றும் இதர பிற நிறுவனங்களின் தலைவர்களுக்காக ஜெபிக்கிறோம். தேவரீர் இவர்களைப் பொதுநல சேவைகளில் பொறுப்பாளர்களாக வைத்திருக்கிறீர். இவர்களுக்கு, இந்த வைரஸ் பரவாதபடி கட்டுப்படுத்தும் மேலான ஞானத்தை தரும்படியும், பயத்தை மேற்கொள்ளும் பெலத்த நம்பிக்கை தரும்படியும், இந்த இக்கட்டான சூழலில் தங்கள்

கடமைகளைச் செய்ய அவர்களுடைய பெலத்திலும் மேலான பெலத்தை கொடுக்கும்படி வேண்டுகிறோம். எல்லா ஞானத்துக்கும் அதிபதியே! ஆலோசனை கர்த்தரே! நீரே வல்லமை உள்ளவர்! நீரே இரக்கம் மிகுந்தவர். இதுவே எங்கள் ஜெபம்

"தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமான துணையுமானவர்.... ஆகையால் நாம் பயப்படோம்" (சங்கீதம் 46: 1-3)

சங்கீதம் 91-ன் வார்த்தைகளால் நான் உங்களை ஆசீர்வதிக்கிறேன்: "அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார். அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும். இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும், இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய். உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது" (சங்கீதம் 91: 3-7)

"என் நீதியின் தேவனே, நான் கூப்பிடுகையில் எனக்குச் செவிகொடும்; நெருக்கத்தில் இருந்த எனக்கு விசாலமுண்டாக்கினீர்; எனக்கு இரங்கி, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்"
(சங்கீதம் 4: 1)

உங்களை நேசிக்கிற எல் ஷடாய் – சர்வவல்லமையுள்ள தேவன் உங்களைப் பாதுகாக்காப்பாராக. உங்களுக்காக மரித்த அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து உங்களை இரட்சிப்பாராக. பரிசுத்த ஆவியானவர் எல்லா குழப்பத்தையும் தணித்து, உங்களுக்காகவும் உங்களுக்காகவும் மற்றவர்களுக்காகவும் இந்த நேரத்தில் பரிந்து பேசுவாராக.

"கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரம ராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்." (2 தீமோத்தேயு 4:18)

**அமைதியாக இருங்கள்**
ஆழமாக சுவாசிக்கவும்; இம்மட்டுமாய் இருந்த தேவ பிரசன்னத்திற்காக நன்றி செலுத்துங்கள்; கடந்த ஒரு மணிநேரத்தில் நீங்கள் ஜெபித்த அனைத்தையும் அவருடைய கரங்களில் அர்ப்பணித்து விடுங்கள்.